# மெததும்பர பிரதேச சபை

# கண்டி மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்தெம்பர் 18 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மெததும்பர பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் அட்டுறு அடிப்படை பின்பற்றப்படாது வியாபார அனுமதிப்பத்திர வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கொங்கிரீட் கலவை இயந்திரம் வாடகைக்கு வழங்குவதன் மூலம் சேகரிக்கப்பட்ட ரூபா 129,000 தொகையான வருமானம் ஆண்டின் வருமானமாகக் கருதப்படாது திரண்ட நிதியக் கணக்கிற்கு நேரடியாகச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுகளின் போது முன்னர் கிடைக்கப்பெற்ற கடை வாடகை கணக்கீடு செய்யப்படுவதற்காக நாட்குறிப்புப் பதிவு இல 36 இன் மூலம் திரண்ட நிதியத்திற்கு ரூபா 1,520,144 ஆல் வரவு வைக்கப்பட்டு கடை வாடகைக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுகளின் போது அறவிடப்பட்ட அக் கட்டணம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படாதிருக்கையில் அவ்வாறு செய்யப்பட்டமையால் திரண்ட நிதியம் அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நிதிக்கூற்றுக்களில் காணப்படும் நிலுவை மூலதன மானியம் ரூபா 24,839,957 தொகையான மீதியில் மூலதன மானியத்தின் கீழ் கொண்டுவரப்படாத ரூபா 7,077,164 தொகையான மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

04 கணக்கு விடயங்களின் பிரகாரம் மீதி ரூபா 25,916,853 ஆகக் காணப்பட்டதுடன் பட்டோலையின் படியான மீதி ரூபா 26,147,041 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 230,188 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 59,413,849 கூட்டுத்தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,705,542 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,823,186 ஆக இருந்தது.

பெறப்பட்டிராததுடன் இதன் காரணமாக மீளாய்வாண்டிற்காக சபைக்கு ரூபா 140,600 தொகையான வருமானம் கிடைக்கப்பெறாது போயிற்று.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாணசபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | |
| (ii) | முத்திரைக் கட்டணம் | |

### 2.2.5 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகாரசபையின் பதிவுசெய்யப்பட்ட 13 ஹொட்டேல்கள் நிலவியமை சபையின் மூலம் இனங்காணப்பட்ட போதிலும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு அனுமதிப்பத்திரம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது 11 ஹொட்டேல்களிலிருந்து ரூபா 3,000 தொகைப்படி அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) வருடாந்த மெய்மையாய்வு அறிக்கையின் படி, 39 வியாபாரங்களுக்காக ரூபா 32,600 தொகையாக்கி பட்டியலிடப்பட்டமை, வருமானப் பதிவேடுகளுக்கு உள்ளடக்கி அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.